வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 18.05.2026 திங்கட்கிழமை இதழ் : 132 பக்கங்கள் : 08


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிமாற்றம்



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று!

யாழ்ப்பாணம், மே. 18

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படு கொலையின் 17ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று திங்கள்கிழமை முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க் காலில் அமைந்துள்ள தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியில் நடைபெறவுள்ளதாக முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அறிவித்துள்ளது.

இன்று முற்பகல் 10.15 மணிக்கு முள்ளிவாய்க்கால் பிரகடனம் வெளியிடப்படவுள்ளது. தொடர்ந்து முற்பகல் 10.29 மணிக்கு மணி ஒலிக்கப்பட்டு, 10.30 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து முற்பகல் 10.31 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்படும். முற்பகல் 10.35 மணிக்கு மலர் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் உயிரிழந்த உறவுகளை

07

## மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட வாய்ப்பு!


கொழும்பு, மே. 18

மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்திற்குள் நடத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்குள் நிலவி வந்த இழுபறிகள் தற்போது ஒரு தீர்க்கமான முடிவை நோக்கி நகர்ந்துள்ள நிலையில், தற்போதைய அரசியல் சூழலில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை எனத் தெரியவருகிறது. இருப்பினும் எதிர்வரும் ஜுன் மாதம் இறுதியில் தேர்தல் முறைமை குறித்த விசேட அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட பின்னர் உறுதியான அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு அமைய தேர்தலை விரைந்து நடத்துவதா? அல்லது தற்போதைய அரசியல் சூழலை அடிப்படையாகக் கொண்டு அதனை 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திவைப்பதா? என்பது குறித்து ஆளும் தேசிய மக்கள் சக்தி

07

### தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட

## கொடூரமான குற்றங்களை உலகம் நினைவு கூர்கிறது!



### அவுஸ்திரேலிய செனட்டர் தெரிவிப்பு

கான்பரா, மே. 18

ஆயுத மோதலின் இறுதி மாதங்களில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட "கொடூரமான குற்றங்களை" உலகம் நினைவு கூர்கிறது என அவுஸ்திரேலிய செனட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய செனட் சபையில் இடம்பெற்ற "தமிழ் இனப்படு கொலை நினைவு வார" விவாதத் தின்போது உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சுமார் 3 இலட்சம் மக்கள் பாதுகாப்பான வலயம் எனப்பட்ட பகுதிக்குள் முடக்கப்பட்டு, குண்டுவீச்சுகள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தமிழ் இனப்படுகொலை என்பது 2009ஆம் ஆண்டில் ஒரேயொரு நாளில் மட்டும் நடந்து விடவில்லை. அது பல தசாப்தங்களாக நிகழ்ந்ததுடன், தற்போதும் தொடர்கிறது - என்றார். (அ)

## பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் திருத்தப்பட்ட சட்ட வரைவின் பணிகள் நிறைவு

கொழும்பு, மே. 18

முன்மொழியப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்" தொடர்பான திருத்தப்பட்ட புதிய சட்ட வரைவின் தயாரிப்புப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளதாக அது தொடர்பான குழு தெரிவித்துள்ளது.

இந்த சட்ட வரைவை வரைவதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிவிப்பின்படி, திருத்தப்பட்ட இந்த சட்டம் மேலதிக சட்டத்துறை பரிசீலனைகளுக்காக சட்ட

07

## இலங்கையின் 5ஆம், 6ஆம் மீளாய்வுக்காக 27ஆம் திகதி கூடுகின்றது நாணய நிதியம்!

கொழும்பு, மே. 18

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியுதவித் திட்டத்தின் கீழ், இலங்கையின் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகள் குறித்த இறுதி முடிவை எடுப்பதற்காக அதன் செயற்குழு எதிர்வரும் 27ஆம் திகதி கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தச் செயற்குழு அமர்வில் இரு மீளாய்வுகளுக்கும் உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கப்படும் பட்சத்தில், இலங்கைக்கு

07

## சிறீதரன் விடயம் குறித்து ஆராய 3 பேர் கொண்ட குழு நியமனம்!

### தமிழரசு மத்திய குழு தீர்மானம்

வவுனியா, மே. 18

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக அவரது இணக்கப்பாட்டுடன் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருப்பதாக தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர்

07

## நீர்த்தடாகத்தில் மூழ்கி 16 வயதுச் சிறுவன் பலி!



### வல்வெட்டித்துறையில் துயரம்

யாழ்ப்பாணம், மே. 18

வல்வெட்டித்துறையில் உள்ள நீர்த் தடாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 3:00 மணியளவில் குடும்பத்துடன் நீராடச் சென்ற சிறுவன்

07

## சுவிஸில் இருந்து யாழ்.வந்த முதியவர் முகமூடி கொள்ளையர்களால் கொலை!

### சண்டிலிப்பாய் பகுதியில் துயரம்

யாழ்ப்பாணம், மே. 18

சுவிஸ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவரை படுகொலை செய்து நகைகள் பணம் என்பவற்றை முகமூடி கொள்ளைக் கும்பல் ஒன்று கொள்ளையடித்து சென்றுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியை சேர்ந்த வல்லிபுரம் சந்திரசேகரம் (வயது-67) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீண்ட காலமாக சுவீஸ் நாட்டில் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்த நிலையில், கடந்த 2 மாத காலமாக விடுமுறையில் சண்டிலிப்பாயில் உள்ள தனது வீட்டில் வந்து தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 14ஆம் திகதிக்கு பின்னர் அவருடன் குடும்பத்தார் தொடர்பு கொள்ள முடியாத நிலையில், நேற்று முன் தினம் சனிக்கிழமை அது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் வீட்டுக்கு சென்ற

07

## காற்றழுத்த தாழ்வுமண்டலம் வலுவிழந்தது!

கொழும்பு, மே. 18

இலங்கைக்கு வடக்கே வங்காள விரிகுடா கடற்பரப்பில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது வலுவிழந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, இலங்கையைச் சூழவுள்ள கடல் பரப்பில் இதன் தாக்கம் படிப்படியாகக் குறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால வானிலை பகுப்பாய்வுகளின்படி,

07

## சிரேஷ்ட ஆங்கில ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் காலமானார்!



கொழும்பு, மே. 18

சிரேஷ்ட ஆங்கில ஊடகவியலாளரும், அரசியல் பத்தி எழுத்தாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் குறித்து குடும்பத்தினரால் பின்னர் அறிவிக்கப்படும்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக்கு அண்மித்திருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழப்பு!

## பல பகுதிகளில் மழை தொடரும்

கொழும்பு, மே 18

நாட்டுக்கு வடக்காக நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது படிப்படியாக வலுவிழந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இருப்பினும், இதன் தாக்கம் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மழையுடனான வானிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இப்பகுதிகளில் மேகமூட்டமான வானிலை காணப்படும்.

அநுராதபுரம் மாவட்டத்தில் அவ்வப்போது மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், பொலநறுவை மாவட்டத்திலும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால், பொதுமக்கள் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடல் பிராந்தியங்களில், காங்கேசன்துறை முதல் புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். ஏனைய கடற்பிராந்தியங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

கடற்பிராந்தியங்களில் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசும். காற்றின் வேகம் மணிக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசன்துறை முதல் பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களில் புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். இதனால் இக்கடல் பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். ஏனைய கடல் பகுதிகள் ஓரளவுக்கு மட்டமாக இருக்கும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசுவதுடன், கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு விரைவில் கிடைக்கும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, மே. 18



ஐந்து வருடங்களுக்கும் மேலாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த பதவியுயர்வுகளை மிக விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் அப்பகுதியின் பாதுகாப்பு நிலைமை குறித்து கண்டறிவதற்காக நடத்தப்பட்ட விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் சேவையைத் தரரீதியாகவும், உயர் தொழில்முறை சேவையாகவும் மேலும் அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் அங்கு விளக்கமளித்தார். இதற்கமைய, தற்போதைய நிலையில் பொலிஸ் நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் திணைக்களத்திற்குள் நிலவும் மனிதவளப் பற்றாக்குறைக்குத் தீர்வாக 10,000 உத்தியோகத்தர்களைப் புதிதாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# வனவாசல ரயில் தடம் புரண்டதில் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடு

கொழும்பு, மே 18

வனவாசல பகுதியில் ரயில் தடம் புரண்டதில் காயமடைந்தவர்களில் மேலும் மூவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாக ரயில் போக்குவரத்து அதிகாரி அசங்க சமரசிங்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்த ஆறு பேரில் ஒருவர் நேற்று முன்தினமே சிகிச்சை பெற்று வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் இருவர் நேற்று வைத்தியசாலையிலிருந்து வெளியேறியதுடன், தற்போது மேலும் மூவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

"இந்த மூன்று பேரில் ஒரு பெண்ணும் இரு ஆண்களும் உள்ளனர். அதில் ஒருவர், தடம் புரண்ட ரயிலுக்கும் அதற்கு அருகில் இருந்த வாகனத்துக்கும் இடையில் சிக்கியே விபத்துக்குள்ளாகியுள்ளார். அவரது கையின் மூட்டுப் பகுதியில் சிறிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோல், அந்தப் பெண்ணுக்கு கழுத்தைத் திருப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ரயிலில் இருந்த பயணிகள் அவசரமாக வெளியேற முயன்றபோது ஏற்பட்ட நெரிசலே இதற்கு காரணமாக இருக்கலாம் என நான் நினைக்கிறேன். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் பயணிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான ஒரு வழிமுறை ரயில்வே திணைக்களத்திடம் உள்ளது. எங்களிடம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டு முறைமை ஒன்று காணப்படுகிறது. இதற்கு முன்னர் இருந்த முறையின்படி, மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும் பட்சத்தில் 105,000 ரூபாயே வழங்கப்படவிருந்தது. அது தற்போது 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரு நாளைக்கு, ஒரு வாரம் வரை தலா 2000 ரூபாய் வீதமும், அதற்கப்பால் 50,000 ரூபாய் வரையிலும் செலுத்துவதற்கான ஒரு வழிமுறையை நாம் உருவாக்கியுள்ளோம் - என்றார்.

# தண்டவாளத்தின் பாகங்கள் 3000 ரூபாவுக்கு விற்கப்பட்டமை விசாரணையில் அம்பலம்!

கொழும்பு, மே 18

வனவாசல ரயில் விபத்து இடம்பெற்ற இடத்தில் கழற்றப்பட்ட தண்டவாளப் பாகங்கள் 3000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் அந்தப் பொருட்களைக் கொள்வனவு செய்த இடம் அடையாளம் காணப்பட்டு அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டார் என்றும் மேல் மாகாண வட பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில், ரயில் தண்டவாளத்தின் ஆணிகளைக் கழற்றிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் வெளிவந்த தகவல்களின் அடிப்படையிலேயே, பொருள்களைக் கொள்வனவு செய்த நபரை கைது செய்ய முடிந்ததாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

ரயில் தண்டவாளப் பாகங்களைக் கழற்றிய நபர் கடுமையான போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், அவர் 25 வயது இளைஞன் எனவும் காலிங்க ஜயசிங்க தெரிவித்தார்.

வனவாசல பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்து குறித்து தெளிவுபடுத்துவதற்காக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமைக்கு மேலதிகமாக, இந்த விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் நஷ்டங்கள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

இந்தப் பாகங்களைக் கழற்றி விற்பனை செய்வதன் மூலம் மிகக் குறைந்த லாபமே கிடைத்த போதிலும், இவ்வாறான சம்பவங்கள் ஊடாக மில்லியன் கணக்கிலான நஷ்டங்கள் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, திருடப்பட்ட பொதுச் சொத்துக்களைத் தெரிந்தே கொள்வனவு செய்தமைக்காக, அந்தப் பொருட்களை வாங்கிய நபருக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படும்.

திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுதல் மற்றும் திருடப்பட்ட பொருட்களைத் தம்வசம் வைத்திருத்தல் ஆகிய இரு விடயங்கள் தொடர்பாகவும் வழக்குத் தொடரப்பட வேண்டும். இவ்வாறான கொள்வனவுகளைச் செய்யும் நபர்களைக் கைது செய்து சட்டம் நிலைநாட்டப்படும். சில வேளைகளில், திருடப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்து, அவர்களுக்கு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட பின்னர், ஒன்று அவர்கள் குற்றவாளிகளாக மாறுவார்கள் அல்லது பிணை வழங்கப்பட்டு வெளியே வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. அது சட்ட நடைமுறை. ஆனால், நாங்கள் கைது செய்வதனையும் வழக்குத் தொடரும் நடவடிக்கைகளையும் மேற்கொள் வோம். இந்தச் சம்பவத்தில், ஏற்பட்ட சொத்துச் சேதங்கள் மற்றும் உயிரிழப்பு அபாயங்கள் குறித்தும் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# இந்தியப் பிரதமரை சந்திக்க தயாராகும் தமிழக முதல்வர்!

சென்னை, மே. 18

தமிழ்நாட்டின் முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், இம்மாத இறுதியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் மோடி தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு மே 21ஆம் திகதி நாடு திரும்பிய பின்னர், இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தமிழக வெற்றிக் கழகம் 108 ஆசனங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. பெரும்பான்மைக்கு 118 ஆசனங்கள் தேவைப்பட்ட நிலையில், ஏனைய கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் மே 10ஆம் திகதி விஜய் தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராகப் பதவி யேற்றார்.

அதனைத் தொடர்ந்து, கடந்த மே 13ஆம் திகதி நடைபெற்ற சட்டசபை நம்பிக்கை வாக்கெடுப்பிலும் விஜய் தலைமையிலான அரசு 144 வாக்குகள் பெற்று தனது பெரும்பான்மையை நிரூபித்தது.

இந்த நிலையில், முதலமைச்சராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து, பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து விஜய் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், நாட்டின் பிரதமரை அவர் உத்தியோகபூர்வமாகச் சந்திப்பது இதுவே முதல்முறையாகும். (அ)

# அச்சுவேலியில் அதிக மழை!

யாழ்ப்பாணம், மே. 18

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழைவீழ்ச்சி நேற்று முன் தினம் யாழ்ப்பாண மாவட்டத்தின் அச்சுவேலிப் பகுதியில் பதிவாகியுள்ளது.

அதன்படி,

குறித்த காலப்ப குதியில் 90.8 மில்லி மீற்றர் அள விலான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் உள்ள சில இடங்களில் சுமார் 75 மில்லிமீற்றர் வரை கனமழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், நிலவி வரும் மழை காரணமாக 20 பெரிய நீர்த்தேக்கங்களும் 19 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் இன்னும் நிரம்பி வழிகின்றன என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 13 மாவட்டங்களுக்கு விடுத்திருந்த மண்சரிவு எச்சரிக்கை இன்னும் அமுலில் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.05.2026 திங்கட்கிழமை
பராபவ வருடம், வைகாசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து இன்றுடன் சரியாக 17 வருடங்கள் கடந்து விட்டன. இன்று ஆயிரக்கணக் கான மக்களின் பங்கேற்புடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு இடம்பெறுகின்ற இரண்டாவது முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வு இதுவாகும்.

முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை எந்தவிதமான இடையூறுமின்றி சுதந்திரமாக நினைவு கூருவதற்கு மக்களை அனுமதிக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் காணாமல் போனோ ரினதும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களும் இதுவரையில் தங்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் தங்களது வேதனையை வெளிக்காட்டுவதற்கு நினைவேந்தல் நிகழ்வுகளில் பெரு மளவில் அணிதிரண்டு பங்கேற்கிறார்கள்.

ஆனால், போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு சமகால நிலைவரங்களுக்கு இசைவான முறையில் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளில் வழிகாட்டத் தெரியாமல் இருக்கும் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் தியாகங்களும் அழிவுகளும் நிறைந்த போராட்ட கால நினைவுகளுடன் தமிழ் மக்களைப் பிணைத்து வைத்திருப்பதில் குறியாக இருக்கின்றன.

பல தமிழக் கட்சிகளைப் பொறுத்தவரை, நினைவேந்தல்களே அவை முன்னெடுக்கின்ற பிரதான அரசியல் செயற்பாடுகளாக இருக்கின்றன.

நினைவேந்தல் அரசியலை தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலமாக தமிழ் மக்களை எதுவரைக்கும் கொண்டு செல்ல முடியும் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு கூறுவதை தமிழர்களின் விமோசனத்துக்காக தங்களது உயிர்களை தியாகம் செய்த போராளிகளை நிந்தனை செய்வதாக வியாக்கியானம் செய்ய வேண்டியதில்லை.

அவர்களின் தியாகங்களை நினைவு கூருவதை மாத்திரம் முக்கியமான அரசியல் செயற்பாடாக முன்னெடுப்பதன் மூலமாக தங்களது அரசியல் இயலாமையை மறைக்க முயற்சிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் மீதான விமர்சனமாகவே இந்த கருத்துக்களை நோக்க வேண்டும்.

# வல்லரசு உச்சி மாநாடு



**அமெரிக்காவும் சீனாவும் தங்களுக்குடையேயான உறவை மறுபரிசீலனை செய்யும் வேளையில், இந்தியா தனது மூலோபாய சுயாட்சியை (strategic autonomy) வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீன ஜனாதிபதி சி ஜின்பிங்குடன் இரண்டு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, கடந்த வெள்ளிக்கிழமை பீஜிங்கில் இருந்து வாஷிங்டனுக்கு புறப்பட்டார். இதன் மூலம் உலகின் இரு பெரும் வல்லரசு களும் தற்காலிகமாக ஒரு சமாதானத்திற்கு வந்திருப்பது போல் தோன்றுகிறது.

வர்த்தகம் முதல் தாய்வான் வரை இரு நாடுகளுக்கும் இடையே நீடிக்கும் நீண்ட கால கருத்து வேறுபாடுகளில் எந்தவொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் இன்றி இந்த உச்சிமாநாடு நிறைவடைந்துள்ளதால், இந்த சமாதானம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதற்குப் பதிலாக, சமீபகாலமாக பல ஏற்ற இறக்கங்களைக் கண்டு வரும் தங்களது உறவில் ஒரு ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருவதி லேயே இரு தரப்பும் தற்போது கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி ட்ரம்ப்பின் எஞ்சிய பதவிக் காலத்திலும் அதற்குப் பிறகும், இரு நாடுகளுக்கும் இடையே "மூலோபாய ஸ்திரத்தன்மை கொண்ட ஒரு ஆக்கப்பூர்வ மான உறவு" தேவை என்று அழைப்பு விடுத்த சீன ஜனாதிபதி இருதரப்பு உறவுகளுக்கு ஒரு புதிய இலக்கணத்தைக் கொடுத்தார். ஒரு ஸ்திரத்தன்மை தேவை என்பதில் இருவருமே உடன்பட்டாலும், அவர்களின் முன்னுரிமை கள் வேறுபடுவதாகவே தோன்றுகிறது. தைவான் விவகாரமே இந்த உறவில் மிக முக்கி யமான விடயம் என்றும் அதைச் சரியாகக் கையாளாவிட்டால் அது மோதலில் போய் முடியலாம் என்றும் டிரம்ப்பிடம் சி ஜின்பிங் கூறினார்.

தைவான் விவகாரத்தில் கணிசமான ஆயுத விற்பனை உட்பட அமெரிக்காவின் நிலைப் பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இந்த தற்காலிக சமாதானம், ட்ரம்ப் நிர்வாகத்தின் அடுத்த ஆயுத விற்பனையை எவ்வாறு கையாளப் போகிறது என்பதைப் பொறுத்தி ருந்துதான் பார்க்க வேண்டும். ட்ரம்ப்பைப் பொறுத்தவரை, சீனா அதிகளவில் அமெரிக் கப் பொருட்களை வாங்குவதும், அரிய மண் கனிமங்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர் த்துவதுமே இருநாட்டு உறவுகளின் ஆரோக்கி யத்திற்கான முக்கிய அளவுகோல்களாக உள்ளன.

சீனா 200 போயிங் விமானங்களை வாங்க வும் சோயாபீன்ஸ் கொள்முதலை அதிகரிக்க வும், அமெரிக்க மாட்டிறைச்சி ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் ஒப்புக் கொண் டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், 10 சீன நிறுவனங்கள் மேம்பட்ட என்விடியா (Nvidia) சிப்களை மீண்டும் வாங்கு வதற்கும் அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. சில சீனப் பொருட்கள் மீதான வரிகளைக் குறைப்பது உள்ளிட்ட வர்த்தகப் பிரச்சினை களைக் கையாள்வதற்கு ஒரு வர்த்தக சபை யையும் (Board of Trade), முக்கியமானதாகக் கருதப்படாத துறைகளில் சீன முதலீடுகளுக்கு அனுமதி வழங்குவதற்காக ஒரு முதலீட்டு சபையையும் (Board of Investment) அமை ப்பது குறித்து இரு தரப்பும் விவாதித்துள்ளன.

இந்த ஒப்பந்தங்கள் உறுதி செய்யப்பட் டால், அது ஒரு கடுமையான வர்த்தகப் போரில் தற்காலிகமாக ஒரு இடைவேளையை மட்டுமே ஏற்படுத்தக் கூடும். இருப்பினும், இந்த பெய்ஜிங் உச்சிமாநாடு, உலகின் இரு பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான உறவு களில் மாறிவரும் பரந்த கட்டமைப்பு இயக் கவியலை (structural dynamics) நினைவூட் டுவதாக அமைந்துள்ளது.

அமெரிக்கா இன்றும் முன்னணி இராணுவ சக்தியாகத் திகழ்ந்தாலும், உலகளாவிய செல் வாக்கைச் செலுத்துவதற்கான அதன் திறனின் வரம்புகள் பெருமளவுக்கு கேள்விக்குள்ளாக் கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஈரான் போருக்குப் பிறகு இது மேலும் அதிகரித் துள்ளது.

சீனாவைப் பொறுத்தவரை, அது இனி மேலும் தன் காலத்திற்காகக் காத்திருக்கவோ அல்லது தனது உலகளாவிய இலட்சியங்களை மறைத்து வைக்கவோ விரும்பவில்லை என்ப தைத் தெளிவாக உணர்த்தியிருக்கிறது. சி ஜின்பிங் டிரம்ப்பிடம் குறிப்பிட்டது போன்று , ஏற்கனவே நிலைபெற்ற ஒரு சக்திக்கும் வளர்ந்து வரும் ஒரு சக்திக்கும் இடையே தவிர்க்க முடியாத மோதலைக் குறிக்கும் "துசிடிடிஸ் பொறி"யை (Thucydides Trap) சீனாவும் அமெரிக்காவும் தவிர்த்து, உறவுகளுக்கான ஒரு புதிய மாதி ரியை உருவாக்க முடியுமா?

இந்த கேள்வி இந்தியாவிற்கும் பிற உலக நாடுகளுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததா கும், ஏனெனில் அவை இந்த இரு நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் அழுத்தங்களுக்குப் பணி யாமல் நிமிர்ந்து நிற்பதும், அதே வேளையில் நாளுக்கு நாள் தன்னம்பிக்கை அதிகரித்து வரும் சீனாவுடனான கடினமான உறவுகளைக் கையாள்வதும் வரவிருக்கும் ஆண்டுகளில் இந்திய இராஜதந்திரத்திற்கு வைக்கப்படும் இரண்டு முக்கிய சோதனைகளாக இருக்கும்.

இந்தச் சூழலில், இந்தியாவின் மூலோபாய சுயாட்சியையும் சுதந்திரத்தையும் பலவீனப்ப டுத்துவதற்குப் பதிலாக, அதை மேலும் வலுப் படுத்துவதே முன்னோக்கிச் செல்வதற்கான சிறந்த வழியாக இருக்கும்.

***(தி இந்து ஆசிரிய தலையங்கம், 16 மே 2026)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மே - 18 திங்கட்கிழமை**
பராபவ வருடம் - வைகாசி 03
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : பிரதமை

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படுவீர்கள். எதிர்பாராத இடத்தில் பணம் வரும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப்பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**மிதுனம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். இனிமையான நாள்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைக்களை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். நீண்ட நாளாக தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். புண்ணியதலங்கள் சென்று வருவீர்கள். உற்சாகமான நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறை கூறிகொண்டிருக்க வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். எதிர்பாராத நன்மை உண்டாகும் நாள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போனகாரியங்கள் முடியும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

# நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருவிழாவுக்கான காளாஞ்சி யாழ். மாநகர சபையிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 18


வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழாவுக்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் அடங்கிய பட்டோலை மற்றும் காளாஞ்சி, பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபையிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இம்முறை நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஆவணி மாதம் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 25 தினங்கள் மகோற்சவம் நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு, ஆலய சூழலைப் பராமரித்தல், மகோற்சவ காலங்களில் வருகை தரும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கான குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் வீதித் தடைகளை ஏற்படுத்தி போக்குவரத்து நெரிசலின்றி சீரான போக்குவரத்துக்கு வழிவகுத்தல் போன்ற பணிகளை யாழ். மாநகர சபை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ அழைப்பாக, ஆலய சம்பிரதாயங்களின்படி நல்லூர் ஆலய கணக்காளரால் பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சி யாழ். மாநகர சபை முதல்வரிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வையொட்டி, யாழ். மாநகர சபை



வளாகம் முழுவதும் பாரம்பரிய முறைப்படி வாழை மற்றும் தோரணங்கள் கட்டப்பட்டு, மிகக் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

(எ)

# வரி விதிப்பால் வாகன விலைகள் அதிகரிக்காது என்பது வேடிக்கை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, மே 18

வாகனங்களுக்கான இறக்குமதி மீது 50 வீத மேலதிக வரி விதிக்கப்பட்டுள்ள பின்னணியில், இந்த வரி விதிப்பினால் வாகனங்களின் விலைகள் அதிகரிக்காது என்று பிரதி நிதி அமைச்சர் கூறுவது வேடிக்கையானது- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம பகுதியில் சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் விட்ஸ் ரக காரொன்றை 12 இலட்சம் ரூபாய்க்கு வழங்குவதாக தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் உறுதியளித்திருந்த போதிலும், இன்று வாகனங்களுக்கான இறக்குமதி மீது 50 வீத மேலதிக வரியை விதிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இனிமேலும் இவ்வாறான நகைச்சுவையான கதைகளை நாட்டிற்கு முன்வைக்காமல், மக்களின் தரப்பிலிருந்து பொருளாதாரத்தை முறையான வழியில் நிர்வகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் பொறுப்பை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமும் அரசாங்கத்தின் 159 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்து வருவதால் பணவீக்கம் அதிகரித்து, பொருட்களின் விலைகளும் செலவினங்களும் உயர்ந்து மக்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரமும் சீர்குலைந்து வருகின்றது. ரூபாயின் வீழ்ச்சியை தடுப்பதற்கும் பொருளாதாரத்தை சீரமைப் பதற்கும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்களை அதிகரித்தல் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் போன்ற நடவடிக்கைகள் அத்தியாவசியமானவையாகும்.

ஆனால், தற்போதைய ஜனாதிபதிக்கும், நிதி அமைச்சருக்கும் மற்றும் அரசாங்கத்துக்கும் பொருளாதாரக் கொள்கைகள் அல்லது பொருளாதாரம் பற்றிய அடிப்படை புரிதலோ அறிவோ இல்லை என்பதால், நாளாந்தம் எடுக்கப்படும் தவறான பொருளாதாரத் தீர்மானங்களினால் நாட்டு மக்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான யுத்த மோதல்கள் உருவான காலத்திலேயே, அதனால் ஏற்படக் கூடிய பொருளாதார சவால்களுக்கு அரசாங்கம் தயாராகியிருக்க வேண்டும். அவ்வாறு திட்டமிட்டிருந்தால் இன்று ரூபாய் இவ்வளவு வேகமாக வீழ்ச்சியடைந்திருக்காது.- என்றார்.

(எ)

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம், ஒருவர் கைது!

வவுனியா, மே 18

வவுனியாவில் ஏ - 9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

திறந்த பல்கலைக்கழகம் முன்பாக நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,வவுனியா ஏ - 9 வீதியூடாக வவுனியா நகரத்தை நோக்கி மோட்டர் சைக்கிள் ஒன்று சென்று கொண்டிருந்த போது அதே வழியில் வந்த இரு சொகுசு வாகனங்கள் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திய கார், பொலிஸா ரால் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மற்றைய வாகனம் தப்பிச் சென்றுள்ளது.

(எ)

# “பாதுகாப்பற்ற கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்களை அமையுங்கள்“

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு - விசுவமடு மகா வித்தியாலயத்தில் உள்ள 50 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையான பாதுகாப்பற்ற கட்டடங்களை அகற்றி, புதிய கட்டடங்களை அமைப்பதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பற்ற கட்டடங்களால் பாடசாலை மாணவர்களுக்கு ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் முல்லை வலயக் கல்விப் பணிமனையே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் எனவும் ரவிகரன் எம். பி. இதன்போது எச்சரித்துள்ளார். புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொழில்நுட்பத் தவறால் ரூ.656 மில்லியன் இழப்பு

## உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிட்டது மக்கள் வங்கி

கொழும்பு, மே 18

குறிப்பிட்டதொரு பணப் பரிமாற்றக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பத் தவறு மற்றும் அதன் மூலம் ஏற்பட்ட நிதியிழப்பு குறித்து மக்கள் வங்கி உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த 2023 மே மாதம் முதல் 2026 மார்ச் வரையான காலப்பகுதியில் நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக குறிப்பிட்ட சில வாடிக்கையாளர்கள் தங்களுக்குரிய தொகைக்கும் அதிகமான பணத்தைப் பெற்றுள்ளதாக வங்கி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தவறு தற்போது முழுமையாகக் கண்டறியப்பட்டு, சரிசெய்யப்பட்டு விட்டதாக மக்கள் வங்கி பொதுமக்களுக்கு அறியத் தந்துள்ளது.

இது குறித்து மக்கள் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்தத் தவறு கண்டறியப்பட்ட உடனேயே முழுமையான உள்ளக மீளாய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, செயல்பாட்டுக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை அதிகாரத் தரப்புக்களின் ஆலோசனையின் கீழ் இவ்விடயம் தற்போது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்விடயத்தால் ஏற்பட்டுள்ள நிதி ரீதியான இழப்பு சுமார் 656 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையை வங்கி ஏற்கனவே அந்தந்த காலப்பகுதிக்கான தனது நிதி அறிக்கைகளில் முழுமையாக உள்வாங்கியுள்ளதுடன், மேலதிக நிதி இழப்பீடு எதுவும் இனி ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவறுதலாக அதிக பணத்தைப் பெற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து, அந்த இழப்பினை மீட்கும் சட்டபூர்வ நடைமுறைகளை வங்கி ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

மக்கள் வங்கியின் ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாடு, இலாப மட்டம் அல்லது வாடிக்கையாளர்களின் வைப்புகளின் பாதுகாப்புக்கு இவ்விடயத்தால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. வங்கியின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் டிஜிற்றல் தளங்கள் எவ்வித தங்குதடையுமின்றி வழக்கம் போல் இயங்கி வருகின்றன.

சுமார் 3.8 ட்ரில்லியன் ரூபாய் சொத்துத் தளத்தைக் கொண்டுள்ள மக்கள் வங்கி, தனது செயல்பாட்டு ரீதியான நேர்மை மற்றும் வாடிக்கையாளர் சேவையின் அதியுச்ச தராதரங்களைத் தொடர்ந்து பேணும் என அந்த அறிக்கையில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, மே 18

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூலுத்தா கொடை வீதி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பெருமளவிலான ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 925 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கல்கிஸ்ஸை பகு தியைச் சேர்ந்த 43 வயதுடைய வர் என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் பலி!

கொழும்பு, மே 18

கொடவெஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலுகொல்ல பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பலுகொல்ல - கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய பெண் ஒருவர் என தெரியவந்துள்ளது.

நீர் மோட்டார் இயந்திரம் ஒன்றிற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்த வயரில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாகவே இந்தச் சம்பவம் நேர்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# மழைவீழ்ச்சியில் வீழ்ச்சி!

கொழும்பு, மே 18

களு கங்கை, களனி கங்கை மற்றும் அத்தனகலு ஓயாவை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் பதிவான மழைவீழ்ச்சி குறைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களு கங்கை படுகையில் 50 முதல் 75 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினத்தில் நதிப் படுகை பிராந்தியங்களில் பதிவான அதிகூடிய மழை வீழ்ச்சி இதுவென தெரிவிக் கப்படுகிறது.

அத்தனகலு ஓயா மற்றும் களனி கங்கை பிராந்தியங்களின் சில இடங்களில் 60 முதல் 70 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும், ஏனைய நதிப் பிராந்தியங்களில் 25 மில்லிமீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

இதேவேளை, அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் உயர் மட்டத்தில் காணப்பட்ட போதிலும், அது தற்போது அவதான நிலைக்குக் கீழ் குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடா கங்கையின் நீர்மட்டம் இன்னும் சிறிய அளவிலான வெள்ள நிலைமை யிலேயே காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# நிதி முறைகேடுகள் தொடர்பில் சிறீலங்கன் ஏர்லைன்ஸ் விளக்கம்

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு சிறீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் மேற்கொண்ட பணச்செலுத்துகை மற்றும் நிறுவனத்தின் சென்னை காரியாலயத்தில் இடம்பெற்ற நிதி முறைகேடு குறித்து விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அந்த நிறுவனம் தெரிவித்துள்ளதாவது, டுபாயில் அமைந்துள்ள சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் கணக்கு, மூன்றாம் தரப்பு ஒன்றினால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, அந்த மோசடியான மின்னஞ்சல் செய்திகள் மூலம் வழங்கப் பட்ட வங்கிக் கணக்கு விவரங்க ளின் அடிப்படையில், தமது நிறுவனம் 974,000 திர்ஹாம் தொகையை அந்த தவறான கணக்கிற்கு செலுத்தியுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், சென்னை காரியாலயத்தில் இடம்பெற்ற நிதி முறைகேடு குறித்து விளக்கமளித்துள்ள அந்த நிறுவனம், சென்னையில் அமைந்துள்ள தமது காரியாலயத்தில் பணிபுரிந்த நிதிப் பிரிவைச் சேர்ந்த இந்திய ஊழியர்கள் குழு வொன்றே இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாக தெரி வித்துள்ளது.

அவர்கள் வணிக விலைப் பட்டியல்களின் கையொப்பங்கள் மற்றும் பணச்செலுத்துகை விவரங்களை போலி ஆவணங்கள் மூலம் மாற்றியமைத்து, 90 மில்லியன் ரூபாய் பணத் தொகையை முறைகேடாகப் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண தேர்தல் நடத்தினால் எமது பலத்தை நிரூபிப்போம்

## மக்கள் வாக்குகளால் பதிலடி கொடுப்பார்கள்

குருநாகல், மே 18

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தினால் எமது பலத்தை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவோம். அரசாங்கத்தின் போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட மக்கள் வாக்குகள் ஊடாக அரசாங்கத்துக்கு பதிலடி கொடுப்பார்கள் என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 75 ஆண்டுகால அரசியல் கட்டமைப்பை விமர்சித்தும், போலியான வாக்குறுதிகளையும் வழங்கியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

அரசாங்கத்தின் எந்த தீர்மானங்களினாலும் மக்கள் பயனடையவில்லை. மாறாக நெருக்கடிக்குள் ளாகியுள்ளார்கள்.

நாட்டு மக்கள் குறித்து அவதானம் செலுத்தாமல் கடந்த கால அரசாங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகள் தொடர்பில் மாத்திரமே அரசாங்கம் சிந்திக்கிறது. அதற்கு அதிக நேரத்தை செலவிடுகிறது. வழக்கு விசாரணைகளின் போது சாட்சியாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்காணப்படுகிறது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் மீது நம்பிக்கை கிடையாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால், ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் சகல உறுப்பினர்களும் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயல்படுகிறார்கள். இந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல்-மோசடிகள் குறித்து இலஞ்ச



ஊழல் ஆணைக்குழு எந்த விசாரணைகளையும் இது வரையில் மேற்கொள்ளவில்லை.

அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்து மக்கள் கடும் விரக்தியடைந்துள்ளார்கள். மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தினால் எமது பலத்தை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவோம். அரசாங்கத்தின் போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட மக்கள் வாக்குகள் ஊடாக அரசாங்கத்துக்கு பதிலடிக்கொடுப்பார்கள். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும். அப்போது தான் அரசாங்கத் தின் பலவீனம் வெளிப்படும்- என்றார்.(எ)

# சாதாரண மக்கள் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்ய முடியாத நிலை

## இறக்குமதியாளர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, மே 18

50 சதவீதம் புதிய மேலதிக வரி அமுல்படுத்தலை தொடர்ந்து வாகன இறக்குமதிக்கான சகல வரிகளும் இனி உயர்வடையும்.

சாதாரண மக் கள் வாகனம் ஒன்றை கொள்வ னவு செய்ய முடியாத அளவுக்கு வாகனங்களின் விலை உயர்வ டையும். புதிய வரி தீர்மா னத்தை அரசாங்கம் மீள்பரிசீ லனை செய்ய வேண்டும்.

அல்லது வரி வீதத்தை குறைக்க வேண்டும் என்று வாகன இறக் குமதியாளர் சங்கத்தின் பிரதி செயலாளர் ரொஷான் ரொட் ரிகோ தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, டொலர் மற்றும் பிரித்தானியாவின் பவுண் ஆகிய நாணய அலகுகளின் பெறுமதி உயர்வு மற்றும் சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அற வீட்டு வரி 2.5 வீதத்தால் உயர்வு ஆகியவற்றின் பின்னணிக்கு மத்தியில் வாகன இறக்குமதியின் போது சுங்க வரிக்கு மேலதிகமாக 50 வீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது.

50 வீத புதிய மேலதிக வரி அமுல்படுத்தலை தொடர்ந்து வாகன இறக்குமதிக்கான சகல வரிகளும் இனி உயர்வடையும். சாதாரண மக்கள் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு வாகனங் களின் விலை உயர்வடையும். புதிய வரி தீர்மானத்தை அர சாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் அல்லது வரி வீதத்தை குறைக்க வேண்டும்- என்றார். (எ)

## ரயில் தண்டவாளத்திலிருந்து

# ஆணியை அகற்றிய நபரின் வீட்டில் கண்டெடுக்கப்பட்ட பல பொருட்கள்



கொழும்பு, மே 18

சனிக்கிழமை காலை களனி மற்றும் வனவாசல ரயில் நிலையங்களுக்கு இடையே நிகழ்ந்த ரயில் விபத்தைத் தொடர்ந்து, ரயில் தண்ட வாளத்திலிருந்து ஆணியை அகற்றியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரின் வீட்டிலிருந்து பல பொருட்களை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இதன்படி ரயில் தண்டவாளங்களை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் 3 இரும்பு நெம்புகோல்கள், சந்தேக நபர் வசித்து வந்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர், வனவாசலவைச் சேர்ந்த 27 வயது இளைஞன் ஆவார்.

பேலியகொடை தலைமையக பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

## சர்வதேச நாணய நிதியத்தின் 5, 6ஆவது மதிப்பாய்வுகள் மே 27 இல்

கொழும்பு, மே 18

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ், இலங்கை தொடர்பான ஐந்தாவது மற்றும் ஆறாவது நாணயக் கொள்கை மதிப்பாய்வுகளை எதிர்வரும் 27 ஆம் திகதி முன்னெடுப்பதற்கு அதன் நிர்வாகச் சபை தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை இந்த மதிப்பாய்வுகளுக்கு ஒப்புதல் அளித்ததன் பின்னர், இலங்கைக்கு சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலரை அடுத்த தவணை நிதியுதவியாகப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொசாக் கருத்துத் தெரிவிக்கையில், இந்த மதிப்பாய்வுகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, பாதிக்கப்படக் கூடிய சமூகப் பிரிவினரைப் பாதுகாக்கும் அதேவேளையில், செலவினங்களை ஈடுசெய்யக்கூடிய வகையிலான மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைச் சூத்திரங்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவது மிக முக்கியமான நிபந்தனையாக அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். (எ)

# லொறி மோதி தேரர் பலி!

கண்டி, மே 18

பேராதனை - ரஜவத்தை வீதி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை லொறி மோதி விபத்துக்குள்ளானதில் தேரர் ஒருவர் உயிரிழந்தார்.

பேராதனையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த லொறி ஒன்று வீதியைக் கடக்க முயன்ற தேரர் மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இதன்போது, விபத்தில் படுகாயமடைந்த தேரர் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் போவலவத்தை பகுதியிலுள்ள ஆசிரமம் ஒன்றில் வசித்து வந்த 83 வயதுடைய தேரர் என அடையாளம் காணப்பட்டார்.

விபத்துடன் தொடர்புடைய லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அடக்குமுறைகளுக்கு எதிராக அரசாங்கம் உடனடி நடவடிக்கை

நுவரெலியா, மே 18

மலையக மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அடக்குமுறைகளுக்கு அமைச்சும் அரசாங்கமும் உடனடி நடவடிக்கை எடுக்கும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு பெருந்தோட்ட நிறுவனங்களினால் இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் பேசப்பட்டு வருகிறது. இது போன்ற சம்பவங்கள் இன்று நோற்று அல்ல தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதை பார்த்து கொண்டு வருகின்றோம். ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி இரத்தினபுரி காவத்த நிலகாமம் பிரதேசத்தில் தொழிலாளி ஒருவர் தனக்கான வீட்டினை அமைத்திருந்த போது அந்த தோட்ட நிருவாகம் தனியார் பாதுகாப்பு பிரிவினரை மேற் கொண்டு அந்த வீடுகளை உடைத்து சேதப்படுத்தியது அந்த தொழிலாளர்கள் மீது தாக்குதலையும் மேற்கொண்டிருந்தார்கள். இந்த விடயத்தினை அரிந்த உடனே சட்ட நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருந்தோம்

சம்பவம் இடம்பெற்று சுமார் 06மணித்தியாலயத் திற்குள் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட 09பேர் கொண்ட குழுவினரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அதன் பிறகு சம்பந்தப்பட்ட பெருந் தோட்ட நிறுவனத்திற்கு எதிராக அமைச்சின் ஊடாக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டு கொண்டிருக்கின்றன. குறித்த தோட்டத்தில் உள்ள 20குடும்பங்களுக்கும் காணிகளை வழங்க அந்த பெருந்தோட்ட நிறுவனம் இனக்கப்பாட்டுக்கு வந்துள்ளது- என்றார்.

(எ)

# மீன்பிடிக்க சென்ற இடத்தில் வலையில் சிக்கியது சடலம்!

மட்டக்களப்பு, மே 18

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் கீழ் வாவியில் மீனவர் வலையில் சிக்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கி ழமை காலையில் மீட்கப்பட்ட தாகக் காத்தான் குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி புதிய டச்பார் வீதியைச் சேர்ந்த 44 வயது டைய சந்திரசேகரன் கஜேந் திரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த வாவியில் சம்பவ தினமான நேற்றுக்காலை 6.30 மணியளவில் வழமைபோல மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண் டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் சடலம் ஒன்று சிக்கியதையடுத்து,

அதனை மீனவர் கரைக்கு இழுத்து வந்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார்.

குறித்த நபர் மதுபோதை யில் வாவியில் நீராடிய நிலை யில் நீரில் மூழ்கினார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரி யவந்த துடன்,

சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தி யசாலையில் ஒப்ப டைப்பதற்கு நீதிமன்ற அனு மதியை பெறும் நடவடிக்கையை முன்னெ டுத்து வருவாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான் குடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விக்டோரியா நீர்த் தேக்கத்தில் மூழ்கி மூன்று பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 18

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்று நீரில் மூழ்கி 3 பேர் உரிழந்துள்ளனர்.

நேற்று தெல்தெனிய - பம்பரகல விகாரைக்கு அருகில் உள்ள விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடுவதற்கு நான்கு இளைஞர்கள் சென்றுள்ளனர்.

அவர்கள் நீராடிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த இளைஞர்கள் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர்.

இதனையடுத்து பிரதேச மக்களுடன் பொலிஸார் இணைந்து தேடுதல் நடத்திய நிலையில் ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், ஏனைய மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாகாண சபை...

அரசாங்கத்திற்குள் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, தேர்தலை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கும் பட்சத்தில் சர்வதேச ரீதியாக ஏற்படக் கூடிய இராஜதந்திர நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சு தற்போது விசேட அவதானம் செலுத்தி வருவதாக அந்த அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இவ்வருட இறுதியில் அரசாங்கம் சர்வதேச அரங்கில் இரண்டு பாரிய சவால்களை ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் மீள்நிகழாமை குறித்த சர்வதேச வாக்குறுதிகளுக்கு இலங்கை அரசு பதிலளிக்க வேண்டியுள்ளமை ஒருபுறமிருக்க, மறுபுறம் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இவ்வருடத்துடன் நிறைவடைகின்றமை அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்த வரிச்சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் இராஜதந்திரிகளுடன் அரசாங்கம் ஏற்கனவே முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த இரு சர்வதேச நெருக்கடிகளிலும் தீர்மானமிக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகளாக மாகாண சபைத் தேர்தல் இழுத்தடிப்பு, பயங்கரவாதத் தடுப்புச் சட்ட மறுசீரமைப்பு மற்றும் சர்ச்சைக்குரிய நீதித்துறை சார்ந்த விடயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், நல்லாட்சி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகிய நான்கு முக்கிய துறைகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள 27 நிபந்தனைகளை இலங்கை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இருப்பினும், பல முக்கிய விடயங்களில் அரசாங்கத்தின் தற்போதைய பதிலளிப்புகள் மற்றும் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லையென ஐரோப்பிய இராஜதந்திர வட்டாரங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளமையானது அரசாங்கத்தை நிதானமாகச் செயற்படத் தூண்டியுள்ளது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் ஊடாக தேர்தல் முறைமை மாற்றங்கள் மட்டுமன்றி, புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்குவது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது. இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பிலுள்ள சர்வதேச இராஜதந்திர மையங்களுடன் ஏற்கனவே விரிவான ஆலோசனைகளை நடத்தியுள்ளதுடன், புலம்பெயர் மக்களுக்கான வாக்குரிமை தொடர்பான பரிந்துரைகள் தற்போது வெளிவிகார அமைச்சிடம் மேலதிக நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முள்ளிவாய்க்கால்...

நினைவு கூர்ந்து அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## பயங்கரவாதத்திலிருந்து...

வரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள உத்தியோகபூர்வ பரிசீலனைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இந்த மே மாத இறுதிக்குள் இந்த புதிய சட்ட வரைவு நீதி அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன தலைமையிலான 17 பேர் கொண்ட துறைசார் நிபுணர்கள் குழுவொன்றினாலேயே இந்த சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. (அ)

## சிறீதரன் விடயம்...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சிக்குள்ளே எடுக்கப்பட்ட தீர்மானமாக இருந்தாலும் அத்தீர்மானம் உரியமுறையில் அறிவிக்கப்படாவிட்டால் அது திரிபுபடுத்தக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. எனவே அதனை உத்தியோக பூர்வமாக கட்சி எடுத்த தீர்மானத்தை அறிவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அரசியல் அமைப்பு பேரவையில் அரசாங்கத்திற்கு சாதகமாக செயற்ப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அது தொடர்பாக அவருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தோம்.

எனவே அந்த பதவியிலிருந்து கட்சியையும் சங்கடப்படுத்தாமல், அவரும் சங்கடப்படாமல் இராஜினாமா செய்யுமாறு கட்சியின் அரசியல் குழு கடிதம் அனுபியிருந்தது.

அதற்கு அவர் இணங்காத காரணத்தினால் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவியில் இருந்து அவர் இறக்கப்பட்டார். அது அனைவருக்கும் தெரிந்த விடயம். இன்றைய கூட்டத்திலும் அந்த விடயம் பேசப்பட்டு இறுதியில் சுமூகமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் அதற்கு இணங்கி இந்த தீர்மானத்தை நிறை வேற்றியிருக்கிறோம்.

அந்த வகையில் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கட்சியில் பதவி நிலையில் உள்ள மூவர் அதாவது தலைவர், நிர்வாக செயலாளர், பொருளாளர் ஆகியோர் இந்த விடயங்கள் உண்மையாக நடந்தனவா இல்லையா என்பது தொடர்பாக சிறீதரனுடனும் கலந்துபேசி ஆராய்ந்து, மத்திய செயற்குழுவுக்கு அறிவிப்பார்கள்.

ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக பேசப்பட்டது. ஆனால் ஒரு இணக்கப்பாடாக இப்படி ஒரு பொறிமுறை ஏற்ப்பட்டுள்ளது-என்றார். (அ)

## இலங்கையின் 5ஆம்...

அத்தியாவசியமாகத் தேவைப்படும் சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி விடுவிக்கப்படும்

இதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு அமைவான ஆறாவது மற்றும் ஏழாவது தவணைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கை தகுதி பெறவுள்ளது

இந்தத் திட்டத்தை செயற்குழு முன்னிலையில் சமர்ப்பிப்பதற்கு முன்னர், பாதிக்கப்படக்கூடிய விளிம்பு நிலை மக்களுக்குப் பாதுகாப்பை உறுதிசெய்தல், மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான அசல் உற்பத்திச் செலவை நுகர்வோரிடமிருந்து மீளப்பெறும் விலை சூத்திரங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிதி உத்தரவாத மீளாய்வுகளை நிறைவு செய்தல் போன்ற பல முக்கிய ஆரம்பக்கட்ட நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததாக சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காற்றழுத்த...

இந்த வளிமண்டலத் தொகுதி தனது வலிமையை இழந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதிகள் மற்றும் நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பகுதிகளுக்கு இனி இதனால் எவ்வித பெரிய தாக்கமும் ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் பிராந்தியங்களில் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்படை சமூகத்தினரின் பாதுகாப்பு கருதியே இந்த விசேட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் முற்றாக வலுவிழந்ததைத் தொடர்ந்து, இந்த வளிமண்டலத் தொகுதி தொடர்பாக வெளியிடப்படும் இறுதி வானிலை அறிக்கை இதுவெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (அ)

## சிரேஷ்ட ஆங்கில...

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கை அரசியல், இனப் பிரச்சினை, புவிசார் அரசியல், சினிமா குறித்து ஆய்வுக் கட்டுகரைகளை எழுதி வந்தார்.

மேலும் 'தி ஐலண்ட்', 'டெய்லி மிரர்', 'டெய்லி எவ்.ரி' உள்ளிட்ட முன்னனி ஆங்கில நாளிதழ்களில் நீண்டகாலமாகப் பத்திகளை எழுதி வந்ததோடு, தனது பிரத்தியேக அரசியல் இணையத்தளத்தினூடாகவும் உலக நடப்புகளைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சுவிஸில் இருந்து...

போது துர்நாற்றம் வீசியதை அடுத்து, வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றபோது, உடலில் வெட்டு காயங்களுடன் முதியவரின் சடலம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், அது தொடர்பில் மல்லாகம் நீதிமன்ற நீதவானுக்கு அறிவித்ததை அடுத்து நீதவான் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சம்பவ இடத்துக்கு விசாரணைகளை முன்னெடுத்தார்.,

சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் , வீட்டில் பொருத்தியிருந்த கண்காணிப்புக் கமெராக்கள் சேதமாக்கப்பட்டுள்ள நிலையில் , கமெரா சேதமாக்க முன்னரான பதிவுகளின் அடிப்படையில் 14ஆம் திகதி இரவுவேளை முகமூடி அணிந்த இருவர் சமையலறை வழியாக உள்நுழைந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

வீட்டுக்குள் புகுந்தவர்கள், வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராக்களை சேதமாக்கிய பின்னர் முதியவரை படுகொலை செய்து வீட்டில் இருந்த நகைகள் மற்றும் பெருந்தொகை பணத்தை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொலிஸ் மோப்ப நாய்களின் தேடுதலை தடுக்கும் முகமாக வீட்டின் பல பகுதிகளிலும் கொள்ளையர்கள் மிளகாய் தூளை வீசியுள்ளனர்.

அதேவேளை, முதியவரின் உடற்கூற்று பரிசோதனையின்போது உடலில் எட்டுக்கும் மேற்பட்ட இடங்களில் கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்டமைக்கான அடையாளங்களும் காணப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளில் பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. (அ)

## நீர்த்தடாகத்தில்...

நீரில் மூழ்கி பரிதாபமாக உரியிழந்துள்ளார்.

சிறு வயதில் தந்தையை இழந்த குறித்த சிறுவன் தாயாரின் அரவனைப்பில் வளர்ந்து வந்த நிலையில் இந்த துயரச்சம்பம் இடம் பெற்றுள்ளது

பருத்தித்துறை புலோலி மேற்கு பகுதியைச் சேர்ந்த திலீபன் சந்தோஷ் (வயது 16) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் உடற் கூற்று சோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# தேசிய வைத்தியசாலையில் மருந்து வகைகள் தட்டுப்பாடு

## அவசர மீளாய்வுக்கு பிரதியமைச்சர் உத்தரவு!

கொழும்பு, மே. 18

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நிலவும் அத்தியாவசிய மருந்துத் தட்டுப்பாடு, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் நிர்வாகக் குறைபாடுகள் குறித்து உடனடியாகக் கண்டறிந்து, விநியோக மற்றும் சேவைத் தொகுதிகளை அவசரமாக மீளாய்வுக்கு உட்படுத்துமாறு சுகாதாரப் பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜயமுனி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற உயர்மட்ட முகாமைத்துவ கலந்துரையாடலின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முதன்மையான மற்றும் பிரதான பரிந்துரை மருத்துவ மனையாக விளங்கும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவைகளைப் பாதிக்கும் பல்வேறு சவால்கள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது அத்தியாவசிய மருந்துகளுக்கு நிலவும் தொடர்ச்சியான தட்டுப்பாடு, மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் காலதாமதங்கள், ஊழியர் பற்றாக்குறை மற்றும் நிர்வாக ரீதியான குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இவ்வாறான காரணிகளால் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளின் வினைத்திறன் பெருமளவில் பாதிக்கப்படுவதாகச் சுகாதார வல்லுநர்கள் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர், கடந்த வருடங்களை விட இவ்வருடம் மருந்துப் பொருட்கள் மற்றும் அவசரகாலக் கொள்வனவுகளுக்கான ஒதுக்கீடுகள் பாதீட்டில் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், வைத்தியசாலை அமைப்புக்குள் விநியோகத் தடங்கல்கள் இன்னும் பதிவாகி வருவதை ஒப்புக்கொண்டார்.

எனவே, மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் மற்றும் விநியோகிக்கும் வழிமுறைகளில் எங்கு இடைவெளிகள் காணப்படுகின்றன என்பது குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் கட்டளையிட்டார்.

இலங்கையின் பொதுச் சுகாதாரத் துறையின் முதன்மை நிறுவனமாக விளங்கும் கொழும்பு தேசிய வைத்தியசாலை, நிலையான சேவைத் தரத்தையும் நோயாளர் பாதுகாப்பையும் பேண வேண்டியது கட்டாயமாகும் எனப் பிரதி அமைச்சர் வலியுறுத்தினார்.

இவ்வாறானதொரு முக்கிய வைத்தியசாலையில் காணப்படும் முறையான பலவீனங்கள், ஒட்டுமொத்த பொதுச் சுகாதாரக் கட்டமைப்பின் மீதும் பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைத்துவிடும் என அவர் எச்சரித்தார். (அ)

# திறைசேரியிடமிருந்து 1.9 பில்லியன் ரூபாய் நிதி கோரும் இலங்கை போக்குவரத்து சபை

கொழும்பு, மே. 18

உலக சந்தையில் டீசல் விலை அதிகரிப்பு மற்றும் ஊழியர்களின் சம்பள உயர்வு காரணமாக ஏற்பட்டுள்ள கடுமையான நிதி நெருக்கடியைத் தணிப்பதற்காக, திறைசேரியிடமிருந்து 1.91 பில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டை இலங்கை போக்குவரத்துச் சபை கோரியுள்ளது.

போக்குவரத்து அமைச்சின் ஊடாக இந்த நிதியுதவி கோரப்பட்டுள்ளதாக இ.போ.ச.வின் பிரதம நிறைவேற்று அதிகாரி தம்மிக ரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக அரசாங்கத்தினால் ஆறு மாத காலத்துக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்தம் 274 மில்லியன் ரூபாய் நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

திறைசேரியின் நிதி ஒதுக்கீடு தாமதமடைந்தால் தினசரி பஸ் சேவைகள் நிறுத்தப்படாது என்ற போதிலும், ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் கடும் சிக்கல் ஏற்படும் எனப் பிரதம நிறைவேற்று அதிகாரி எச்சரித்துள்ளார்.

சம்பளக் கொடுப்பனவுகள் தாமதமானால், ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, செலவீனங்கள் அதிகரித்துள்ள போதிலும் பஸ் கட்டணங்களை உயர்த்துவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை இதுவரை அனுமதி கோரவில்லை.

இலாப நட்டங்களை கணக்கிட்டு, தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவின் முறையான அனுமதியைப் பெறாமல் கட்டணங்களை உயர்த்த முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாதஸ்வர மேதை பாலமுருகனுக்கு நேற்று "இசைஞானகேசரி" விருது!



யாழ்ப்பாணம், மே. 18

நாதஸ்வர மேதை சு. பால முருகனுக்கு "இசைஞானகேசரி" விருதை சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கி கௌரவித்துள்ளது. நேற்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற வைகாசி பெருவிழாவிலேயே இவ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து சந்நிதியான் ஆச்சிரமம் வரை மங்கல வாத்தியம் முழங்க பாலமுருகன் அழைத்து வரப்பட்டு அங்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதில் வாழ்த்துரையை கலாபூசணம் சிவஞானராஜா உட்பட பலரும் நிகழ்தியத்துடன் பாலமுருகனுக்கு பலரும் பொன்னாடை மற்றும் மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர். (அ)

# தேசிய மக்கள் சக்தி எம்.பி.யின் வாகனம் மோதி 2 பேர் படுகாயம்!

கொழும்பு, மே. 18

தேசிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டி.கே ஜயசுந்தர பயணித்த கப் ரக வாகனம், ஓட்டோ ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து ஹினிதும, ஹபரகடை பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் ஓட்டோச் சாரதியும் 8 வயது சிறுவனும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெற்றபோது, பாராளுமன்ற உறுப்பினரின் சாரதியே காரைச் செலுத்தியிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பாகக் காரின் சாரதி ஹினிதும பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மேல் மாகாண ஆளுநர் பதவி விலக தீர்மானம்

கொழும்பு, மே. 7

மேல் மாகாண ஆளுநர் பதவியிலிருந்து தாம் விலகத் தீர்மானித்துள்ளதாக ஹனீப் யூசுப் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை விடுத்து அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில், ஆளுநர் என்ற பொதுப் பதவியின் பொறுப்புகள், வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவராக பணியாற்றுவதற்கான கூடுதல் பொறுப்புகள் மற்றும் தமது குடும்ப கடமைகள் ஆகியவற்றை சமநிலைப்படுத்துவதில் அதிகரித்து வரும் சவால்களைக் கருத்திற்கொண்டு குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் மேல் மாகாண ஆளுநர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் வரையில் தாம் ஆளுநராக கடமையாற்றவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிக்கும் வகையிலும், தமது சர்வதேசத் தொடர்புகள் மற்றும் வலையமைப்புகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு முதலீடுகளை ஈர்க்கவும், தேசத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யவும், வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான ஜனாதிபதியின் விசேட தூதுவராக தற்போதைய தன்னார்வ பதவியில் தொடர்ந்தும் நீடிப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாகவும் ஹனீப் யூசுப் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாதுகாப்பு படைகளின் பிரதானி பதவியை ரத்து செய்யும் சட்டமூலம் வர்த்தமானியில்!

கொழும்பு, மே. 18

பாதுகாப்புப் படைகளின் பிரதானி சட்டத்தை நீக்குவதற்கான சட்டமூலம் அரசாங்க வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலம், மே மாதம் 15ஆம் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க பாதுகாப்புப் படைகளின் பிரதானி சட்டத்தை நீக்குவதற்கும், அது தொடர்பான அல்லது அதன் அத்தியாவசிய விடயங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது "2026 பாதுகாப்புப் படைகளின் பிரதானி சட்டத்தை நீக்கும் சட்டம்" என அழைக்கப்படவுள்ளதுடன், இந்த சட்டமூலத்தின் மூலம் பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவி முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் நாள் முதல் பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவிக் காலம் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பதவியை வகிக்கும் நபர், அவர் சார்ந்த முப்படைகளின் உரிய சேவைப் பிரிவுக்கு மீண்டும் இணைக்கப்படவுள்ளார்.

இதற்கமைய, இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்துக்குச் சொந்தமான அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அனைத்தும் பாதுகாப்பு விடயதானம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அந்த சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மட்டு., அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொள்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே. 18

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்வரும் 20 ஆம் 22 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

விஜயத்தின் முதற்கட்டமாக மே 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் செல்லும் ஜனாதிபதி , பழைய மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து, போதைப் பொருள் ஒழிப்பை இலக்காகக் கொண்டு மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடத்தப்படவுள்ள முழு நாடும் ஒன்றாக தேசிய வேலைத்திட்டத்தி லும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, 22ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி, நிந்தவூர் கலாசார நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைக்கவுள்ளார். அத்துடன், அம்பாறை நகரில் அமையவுள்ள புதிய வர்த்தகத் தொகு திக்கான கட்டுமானப் பணிகளையும் அவர் இதன்போது ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் இறுதி நிகழ்வாக, அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, பிராந்தியத்தின் அபிவிருத்திப் பணிகள் குறித்து ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media